### திருக்கோவிலூர் – விழுப்புரம் மாவட்டத்தில்

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரூ.2 ஆயிரம் நிவாரணம்!

## அமைச்சர் க.பொன்முடி வழங்கினார்!

விழுப்புரம் . டிச. 6 -

விழுப்புரம் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு2ஆயிரம்ரூபாய் நிவாரணத் தொகையை அமைச்சர் க.பொன்முடி. வழங்கினார் திருக்கோவிலூர் நகராட்சியில் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 450 குடும்பங்களுக்கு. தமிழ்நாடு அரசு சார்பில் 2 ஆயிரம் ரூபாய் நிவாரணத் தொகையை அமைச்சர் க.பொன்முடி வழங்கினார்.

புயல் கனமழையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவித்தொகை வழங்கப்படும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்திருந்தார். அதன்படி. கள்ளக் குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் நகராட்சியில் மழையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 2 ஆயிரம் ரூபாய் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் பிரசாந்த் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில். முதல்கட்டமாக பாதிக்கப்பட்ட 450 குடும்பங்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபாய், அரிசி. பருப்பு. சர்க்கரை ஆகிய மளிகைப் பொருட்களை அமைச்சர் பொன்முடி வழங்கினார். திருக்கோவிலூர் நகர்மன்ற தலைவர் முருகன். நகர செயலாளர் கோபி. தலை மைச் செயற்குழு உறுப்பினர் செல்வராஜ். ஒன்றிய செயலாளர் விஸ்வநாதன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். அப்போது பேசிய அமைச்சர் பொன்முடி. மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகள் மற்றும் நிலங்கள் கணக்கெடுப்பு பணிகள் நடைபெற்று வருவதாகவும். இந்தப் பணிகள் முடிவடைந்த பிறகு அனைவருக்கும் உரிய நிவாரண உதவி வழங்கப்படும் என்று கூறினார்.

### அதானி ஊழல் குறித்து விசாரணை நடத்த வேண்டும்!

# நாடாளுமன்றத்தில் அதானி விவகாரம் குறித்து விவாதிக்க வேண்டும்!

## நாடாளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம்!

புதுடெல்லி, டிச. 6-

அதானி ஊழல் குறித்து விசாரணை நடத்த வலியுறுத்தி நாடாளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி கட்சி எம்.பி.க்கள் 3வது நாளாக நேற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வெளிநாடுகளில் ஒப்பந்தங்களை பெற அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்த விவகாரத்தில் கவுதம் அதானிக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், உலகளவில் இந்தியாவின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்திய அதானி மீதான புகார் குறித்து உரிய விசாரணை நடத்தி கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், நாடாளுமன்ற இரு அவைகளிலும் இதுகுறித்து விவாதிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி இந்தியா கூட்டணி கட்சி எம்.பி.,க்கள் நாடாளுமன்ற வளாகத்தில் 3வது நாளாக நேற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி எம்.பி., மக்களவை தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர். பாலு, நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணா நிதி, மாநிலங்களவை தி.மு.க. குழுத் தலைவர் திருச்சி சிவா உள்ளிட்ட இந்தியா கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த எம்.பி.க்கள் கலந்து கொண்டனர்.

மோடி மற்றும் அதானிக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய ஆடையை அணிந்து அவர்கள் பங்கேற்றனர். இந்த விவகாரத்தில் செவிமடுக்காமல் இருக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் காதுகளில் ஒலிக்கும் வகையில் கைகளை தட்டி முழக்கங்களை எழுப்பினர்.

அப்போது, அதானி விவகாரத்தில் பிரதமர் மோடி மவுனம் காப்பது ஏன் என்று வினவினர். அதானி மீதான விசாரணை, தம் மீதான விசாரணை என மோடி நினைப்பதால்தான், அதற்கு இதுவரை அனுமதியளிக்கப்படவில்லை என்று கண்டனம் தெரிவித்தனர். அதானி ஊழல் குறித்து நாடாளுமன்ற கூட்டுக் குழு விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என வலியுறுத்தி பேரணியாகச் சென்று முழக்கங்களை எழுப்பினர்.

**அதானி மீதான விசாரணை மோடி மீதான விசாரணைக்கு சமம்**

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

ஆர்ப்பாட்டத்தின் போது செய்தியாளர்களிடம் பேசிய ராகுல்காந்தி, மோடியும், அதானியும் ஒன்றுதான் என தெரிவித்தார். அதானி மீது நடத்தப்படும் விசாரணை என்பது, மோடி மீது நடத்தப்படும் விசாரணை என்பதற்கு சமம் என்று தெரிவித்த அவர், அதனால்தான் மோடி அச்சப்படுவதாக சாடினார்.

### இரயில்வே திருத்த சட்டம் 2024 மீதான விவாதம்!

# சரக்கு ரயில்களின் வேகம் கூட்டப்பட வேண்டும்!

## மக்களவையில் தங்கதமிழ்ச் செல்வன் வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச.6-

மக்களவையில் கழக உறுப்பினர் தங்கம் தமிழ்ச்செல்வன் பேசியதாவது:-

முதலில், புதிய குற்றவியல் சட்டம் மற்றும் விமானச் சட்டம் போன்றவற்றை சமஸ்கிருதத்தில் மாற்றியது போல் இந்த சட்டத்தின் பெயரையாவது மாற்றாமல் இருந்ததற்கு ஒன்றிய அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு இந்த உரையை துவங்குகிறேன்.

இரயில்வே திருத்த சட்டம் 2024, நோக்கம்:

இரயில்வே வாரியச் சட்டம் (Railways Board Act), 1905, இரயில்வே சட்டம் (Railways Act), 1989 ஆகிய இரண்டையும் ஒன்றிணைத்து சட்டக் கட்டமைப்பை எளிமைப்படுத்துவதே இந்த மசோதாவின் முக்கிய நோக்கமாக காணப்படுகிறது.

**தமிழ் மொழி பேசும் ஊழியர்கள்:**

இந்த மசோதாவில் அத்தியாயம் 1Aவில் இரயில்வே வாரியம் (Railway Board) பற்றி கூறப்பட்டுள்ளது. இதில் தலைவர், செயலாளர், மேலாளர்கள் மற்றும் பிற பணியாளர்களை நியமிக்கும் அதிகாரம் ஒன்றிய அரசுக்கு மட்டுமே உள்ளது. இதில் எனது கோரிக்கை என்னவென்றால், அந்த அந்த இடத்திற்கு ஏற்ப அந்த பகுதியில் பேசும் மொழி தெரிந்த பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். தென்னக இரயில்வே பெரும்பாலும் தமிழகம் மற்றும் கேரளாவை உள்ளடக்கியதால், தென் மண்டல பொது மேலாளர் தமிழ் அல்லது மலையாளம் தெரிந்தவராக இருக்க வேண்டும். டிக்கெட் கவுண்டரில் உள்ள பணியாளர்களுக்கும் கூட தமிழ் மொழி தெரிந்திருக்க வேண்டும். இதே போல் இந்தியாவின் அனைத்து பகுதிகளிலும் செய்யப்பட வேண்டும்.

அடுத்ததாக, சரக்கு ரயில்கள் தற்போது மணிக்கு 35 Kms வேகத்தில் தான் செல்கின்றன. இதை 70 Kms ஆக உயர்த்தினால் சரக்குகள் விரைவாக சென்றடையும். இது நாட்டிற்கு கூடுதல் வருவாயை ஈட்டித்தரும்.

**திண்டுக்கல் to சபரிமலை இரயில் பாதை:**

டிக்கெட் கட்டணம் மிகவும் குறைவாக உள்ளதால் இரயில்வே நஷ்டத்தில் இயங்குவதாகவும் வருவாய் இல்லை என்றும் ஒன்றிய அரசு கூறுகிறது. ஆனால் சரக்கு இரயில்களின் வேகத்தை அதிகரிப்பது போலவும், திண்டுக்கல் முதல் சபரிமலை வரை புதிய இரயில் பாதை அமைப்பது போன்ற திட்டங்களையும் செயல்படுத்தினால் உச்சகட்ட காலத்தில் ஒரு கோடி பக்தர்களும், மாதந்தோறும் லட்சக்கணக்கான மக்களும் பயணிப்பார்கள். மேலும் இந்த பாதை விவசாய நிலமான தேனியை கடந்து செல்வதால், பல்வேறு விளைபொருட்களின் போக்குவரத்திற்கும் உதவும். இது போன்ற திட்டங்களால் இரயில்வேயின் வருவாய் உயரும், மக்களும் பயனடைவார்கள்.

மேலும், எனது தொகுதியில் உள்ள சோழவந்தான் போன்ற இடங்களில் இரயில் நிறுத்தம் அமைத்தால், போக்குவரத்து சிரமத்தால் அவதிப்படும் அப்பகுதி மக்கள் பயனடைவார்கள். இரயில்வேக்கும் வருவாய் கிடைக்கும்.

அதுபோல ஈரோடு to பழனி புதிய ரயில் பாதை மற்றும் காட்பாடி ரயில் நிலைய மறுசீரமைப்பு, பெர்மாபலூர் ரயில் பாதை போன்ற முக்கிய உள்கட்டமைப்பு திட்டங்கள் தாமதம் மற்றும் போதுமான நிதி ஒதுக்கீடு இல்லாததால் பாதிக்கப்பட்டு, இணைப்பு மற்றும் பயணிகள் அனுபவத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

இது போன்ற திட்டங்கள் இரயில்வேயின் வருவாயை அதிகரிக்க செயல்படுத்தப்பட வேண்டும்.

*Kavaach System:* அடுத்ததாக, இந்தியா முழுவதும் கவச் (தானியங்கி ரயில் பாதுகாப்பு அமைப்பு) நிறுவ ஒன்றிய அரசு 800 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. ஆனால் இது சரியாக செயல்படுத்தப்படவில்லை. ரயில் விபத்துகளை தடுக்க கவச் அமைப்பை எல்லா இடங்களிலும் நிறுவ வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

**இரயில்களின் பெயர்கள்:**

காங்கிரஸ் ஆட்சியில் பாண்டியன், சேரன், சோழன், பொதிகை என ரயில்களுக்கு பெயர் வைத்தனர். ஆனால் இந்த பாஜக அரசு வந்தே பாரத், நமோ பாரத், தேஜஸ் என பெயர் வைப்பது அந்த அந்த பகுதியில் பேசும் மொழிகளுக்கும் மாநிலங்களுக்கும் முக்கியத்துவம் தராததை காட்டுகிறது.

**பெண் ரயில் ஓட்டுநர்களின் நலன்:**

மக்கள் பொதுத்துறை மற்றும் பொதுச்சேவைகள் ஆணையம், பெண் ரயில் ஓட்டுநர்கள் குழந்தை பிறப்புக்கு பின் ஆறு மாதங்களில் பணிக்குத் திரும்ப வேண்டிய நிலை மற்றும் மாதவிடாய் விடுப்பு மறுக்கப்படுவது குறித்த கவலைகளை எழுப்பியது. தமிழக முதல்வர் அரசு ஊழியர்களுக்கு 1 வருடம் மகப்பேறு விடுப்பு அளித்துள்ளது அதை கருத்தில் கொண்டு ஒன்றிய அரசும் இது போன்ற திட்டங்களை மக்களுக்கு கொடுக்க வேண்டும்.

16 மணி நேர பணிக்குப் பின் 30 மணி நேர தொடர்ச்சியான ஓய்வு வேண்டும் என்ற கோரிக்கை மற்றும் ரயில் ஓட்டுநர்களுக்கு நாள் ஒன்றுக்கு 8 மணி நேரம், வாரத்திற்கு 48 மணி நேரமாக பணி நேரத்தைக் குறைக்க பரிந்துரை.

தண்டவாள பராமரிப்பு:

2022ஆம் ஆண்டு தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் (CAG) அறிக்கையின்படி, 20 சதவீதத்திற்கும் அதிகமான ரயில் தண்டவாளங்கள் அவற்றின் வடிவமைப்பு ஆயுட்காலத்தை தாண்டியுள்ளன, இது ரயில் தடம் புரள்வதற்கான அபாயத்தை அதிகரிக்கிறது. இதை கருத்தில் கொண்டு சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

**மண்டலங்களுக்கு சுயாட்சி:**

இறுதியாக, இந்த மசோதாவில் இரயில்வே வாரியச் சட்டம் 1905, இரயில்வே சட்டம் 1989 ஆகியவற்றை ஒருங்கிணைத்து சட்டக் கட்டமைப்பை எளிமைப்படுத்தியுள்ளீர்கள். இதில் எனது பரிந்துரை என்னவென்றால், மண்டலங்களுக்கு(Zones) தன்னாட்சி வழங்க வேண்டும். அவர்களை சுதந்திரமாக முடிவெடுக்க விடுங்கள். இது உள்ளூர் தேவைகளை புரிந்து கொள்ளவும், கோரிக்கைகளை நிறைவேற்றவும் உதவும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# தமிழ்நாட்டில் அகழ்வாராய்ச்சிக்கு நிதி ஒதுக்கப்படுகிறதா?

## மக்களவையில் எம்.எம்.அப்துல்லா கேள்வி

புதுடெல்லி, டிச. 6-

“இந்திய தொல்லியல் துறையால் (ASI) கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ் நாட்டில் நடத்தப்பட்ட அகழாய்வு பணிகள் என்னென்ன? என்றும் அதற்காக போதிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா? என்றும்” தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு எம்.எம்.அப்துல்லா அவர்கள் நாடாளுமன்றத்தில் கேள்விகளை எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த மாண்புமிகு இந்திய ஒன்றிய கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷேகாவத் அவர்கள் “இந்திய தொல்லியல் துறை (ASI), வடக்குப்பட்டு மற்றும் ஆதிச்சநல்லூரில் 2020 மற்றும் 2024 க்கு இடையில் தொல்லியல் அகழாய்வுகளை நடத்தியது.

2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் காஞ்சிபுரம் மாவட்டம் காஞ்சிபுரம் மாவட்டம் வடக்குப்பட்டு பகுதியில் உள்ள தொல்லியல் களத்தில் நடத்தப்பட்ட அகழாய்வுப் பணிகளின்படி இப்பகுதியில் கிடைத்த பொருட்கள் அனைத்தும் மத்திய கற்காலம் தொடங்கி 6 முதல் 13 ஆம் நூற்றாண்டு வரையிலான ஆரம்ப மத்திய காலம் வரையிலான காலத்தைச் சேர்ந்தது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இத்தொல்லியல் களத்தில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியின்போது மத்திய கற்கால கல் கருவிகள் மற்றும் தமிழ் பிராமி கல் வெட்டுகள், சிற்பங்கள், விலையுயர்ந்த கல் மணிகள்,

செப்பு நாணயங்கள் மற்றும் தங்கப் பொருட்கள் ஆகியவை கண்டெடுக்கப்பட்டன.

2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூரில் உள்ள தொல்லியல் களத்தில் நடத்தப்பட்ட அகழாய்வுப் பணிகளின்படி இப்பகுதியில் கிடைத்த பொருட்கள் அனைத்தும் பெருங் கற்காலத்தைச் சேர்ந்தது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இத்தொல்லியல் களத்தில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியின்போது 160-க்கும் மேற்பட்ட கலசங்கள் மற்றும் புதைகுழிகள், எலும்புக்கூடு எச்சங்கள், கல்லறை பொருட்கள், பண்டைய உலோக ஆபரணங்கள், தங்க கிரீடங்கள், உயர்தர வெண்கலப் பொருட்கள், மட்பாண்டங்கள் ஆகியவை கண்டெடுக்கப்பட்டன. கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டில் நடத்தப்பட்ட அகழாய்வுப் பணிகளுக்கு மூன்று கோடியே இருபத்து எட்டு இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்திரண்டு ரூபாய் (Rs. 3,28,94,852) செலவு செய்யப்பட்டுள்ளது” என்று தெரிவித்துள்ளார்.

### செமிகண்டக்டர் தயாரிக்கும் புத்தாக்க நிறுவனங்களுக்கும்,

# ஆராய்ச்சியாளர்களுக்கும் ஒன்றிய அரசிடம் ஏதேனும் சலுகை திட்டங்கள் உள்ளனவா?

## மக்களவையில் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி?

புதுடெல்லி, டிச. 6-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம், நாடாளுமன்ற உறுப்பினர், திரு. எஸ். ஜெகத்ரட்கன் 04 டிசம்பர் 2024 அன்று மக்களவையில், மிண்ணனு மற்றும் கணிணித்துறை வளர்ச்சிக்கு பெரிதும் பயன்படக்கூடிய செமிகண்டக்டர் தயாரிக்கும் புத்தாக்க நிறுவனங் களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் பெரிதும் உதவி செய்யும் வகையில், ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளவா? என்றும் அதற்கான சலுகைகள் ஏதேனும் அளிக்கப்பட்டுள்ளனவா? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் மிண்ணனு மற்றும் கணிணித் துறை இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

ஒன்றிய அரசின் மிண்ணனு மற்றும் கணிணித் துறை இணையமைச்சர் அளித்த பதில் :

செமிகண்டக்டர் தயாரிப்பில் ஈடுப்பட்டுள்ள புத்தாக்க நிறுவனங்களையும், ஆராய்ச்சியாளர்களையும் ஊக்கப்படுத்தும் வகையில், ஒன்றிய அரசின் மி;ண்ணனு மற்றும் கணிணித் தொழில்நுட்பத் துறை பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது என்றும், தனியார் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு நிதியுதவி அளித்தல், செமிகண்டக்டர் வடிவமைப்பில் உதவி செய்தல், திறன் மேம்பாட்டிற்கான பயிற்சி அளித்தல் என ஒன்றிய அரசு உதவி செய்து வருகிறது என்று இணையைமச்சர் தெரிவித்தார்.

மேலும், 2022 ஆண்டு முதல் 2027 வரையில், 113க்கும் அதிகமான ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும், புத்தாக்க நிறுவனங்களுக்கும், செமி

கண்டக்டர் தயாரிப்பில் உதவி செய்திட,ரூபாய் 250 கோடிகள் அளவிற்கு நிதியுதவி செய்ய திட்ட மிடப்பட்டுள்ளது என்றும்,

இத்திட்டத்தின் மூலம், பொறியியலில் பட்டம் பெற்றுள்ள 85000 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு செமிகண்டக்டர் துறையில் கிடைத்திடும் என்றும், இதனால் பெருமளவு ஆராய்ச்சியும் மேம்படுத்தப்படும் என்று கூறினார்.

செமிகண்டக்டர் வடிவமைப்பு துறையில் ஆராய்ச்சியை மேம்படுத்துவதன் மூலம், இந்தியாவிலேயே தயாரிக்கும் காது கேளாதேவர்க்கு உரிய கருவிகளும் தயாரிக்கப்படும் என்றும், ரூபாய் 76,000 கோடிகள் அளவிற்கு நிதி உதவி செய்வதன் மூலம் செமிகண்டக்டர் துறையின் வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சிகள் முன்னெடுத்து செல்லப்படுவதுடன், 42 வடிவமைப்பு கம்பெனிகளும், 15 செமிகண்டக்டர் நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிக்கவும் ஒன்றிய அரசின், மிண்ணனு மற்றும் கணிணித் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது என்று, ஒன்றிய அரசின் மிண்ணனு மற்றும் கணிணித்துறை இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா அவர்கள், மக்களவையில் அரக்கோணம் திமுக நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

### துணை முதல்வராகப் பொறுப்பேற்று முதன்முதலாக

# இராணிப்பேட்டை மாவட்டத்திற்கு இன்று வருகை தரும் உதயநிதி ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் ஆர்.காந்தி அறிவிப்பு!

இராணிப்பேட்டை, டிச. 6-

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர், மாவட்ட கழக செயலாளர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி கலந்து கொண்டு கழக இளைஞரணி செயலாளர், தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நமது மாவட்டத்திற்கு வருகை குறித்து, தமிழ்நாடு அரசு வளர்ச்சி திட்ட பணிகளின் ஆய்வு குறித்து ஆலோசனை வழங்கினார்.

இதில் கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர் ஆர். வினோத் காந்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கண்ணையன், சுந்தரம், அசோகன், கலைமணி, மாவட்ட துணைச் செயலாளர்கள் மு. சிவானந்தம் துரை மஸ்தான், குமுதா குமார் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைம்வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு :

கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக அரசுகள ஆய்வுக்காக நாளை (6ந் தேதி வெள்ளிக்கிழமை) காலை 10 மணிக்கு நமது மாவட்டத்திற்கு வருகை தருகிறார்.

தமிழக முழுவதும் அரசின் திராவிட மாடல் நாயகர் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களின் நல்லாட்சியின் திட்டங்கள் பொதுமக்களுக்கு எவ்வாறு சென்றடைகிறது என்கிற கழக அரசின் கள ஆய்வுக்காக ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று வெற்றிகரமாக சுற்றுப்பயணம் செய்து வருகிறார்.

வெற்றி பயணத்தின் தொடர்ச்சியாக நமது மாவட்டத்திற்கு வெள்ளிக்கிழமை அன்று வருகை தருகிறார். இளைஞர்களின் மத்தியில் கொள்கை பாசறை நடத்தி கழகத்திற்கு லட்சக்கணக்கான இளைஞர்களை ஈர்த்தவர். வரலாற்று சிறப்புமிக்க இளைஞரணி இரண்டாவது மாநில மாநாடு சேலத்தில் நடத்தி வரலாறு கண்டவர்.

தற்போது தமிழக முழுவதும் ஆயிரக் கணக்கான இளைஞர்கள் மாணவர் களித்தில் பேச்சுப் போட்டி நடத்தி பேச்சாளராக பலரை உருவாக்கி கொண்டிருப்பவர் உதயநிதி ஸ்டாலின் ஆவார்.

இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறையில் பொறுப்பேற்று இந்தியாவிலேயே தமிழகம் விளையாட்டுத் துறையில் முதன்மை பெற செய்தவர். துணை முதல்வராக வருங்காலத்தில் தமிழகத்தை வழி நடத்த இருப்பவர் உதயநிதி ஸ்டாலின் ஆவார்.

தமிழக துணை முதலமைச்சராக பொறுப்பேற்று தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து ஆய்வு மேற்கொண்டு கழக அரசின் நலத்திட்டங்கள் பொதுமக்களுக்கு சென்றடையும் வகையில் சிறப்பாக ஆய்வு செய்து பணியாற்றி அனைத்து மக்களிடத்திலும் நன்மதிப்பை பெற்று கழகத் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் கழகத்திற்கும் பெருமை பெற்று தருபவர் உதயநிதி ஸ்டாலின் ஆவார் .

தமிழ்நாடு துணை முதல்வராக பொறுப்பேற்று முதன் முதலாக நமது மாவட்டத்திற்கு வருகை தரும்உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிப்பது நமது தலையாய கடமையாகும்.

வருகிற வெள்ளிக்கிழமை அன்று 11 மணி அளவில் இராணிப்பேட்டை அரசு மேல்நிலைப் பள்ளி விளையாட்டு திடலில் நடைபெறும் அரசு நிகழ்ச்சிகளில் மாவட்டத்தில் உள்ள 280 ஊராட்சிகளுக்கு கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும்விழா நடைபெறுகிறது.

விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்பை ஒவ்வொரு ஊராட்சிகளுக்கும் தமிழக துணை முதல்வர் அவர்கள் வழங்கி சிறப்புரை நிகழ்த்த உள்ளார்.

எனவே மாவட்ட கழக நிர்வாகிகள் செயற்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள்,பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு மேற்கண்ட நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடைபெற முழு ஒத்துழைப்பு தரவேண்டும் என தீர்மானிக்கப்படுகிறது

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.


**திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்**

**வீரா (எ) வி.வீரமணி**

**டிசம்பர் 6 (2020)**

கழகக் குடும்பத்தைச் சேர்ந்த இவர், தனது இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

வடசென்னை மாவட்டத்தில், பகுதிப் பிரதிநிதியாகவும், வட்டக் கழகச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.